செய்தி வெளியீடு எண்.1023 நாள்.**24.11.2008**

# இலங்கைத் தமிழர் நிவாரண நிதிக்கு தமிழக அரசின் பள்ளிக் கல்வித்துறை சார்பாக 12 கோடியே 61 இலட்சத்து 88 ஆயிரம் ரூபாய்

## முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் வழங்கினார்

**இலங்கையில் பாதிக்கப்பட்டுள்ள தமிழர்களுக்கு நிவாரண உதவிகள் வழங்குவதற்காக மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் விடுத்த வேண்டுகோளை ஏற்று, தமிழக அரசின் பல்வேறு அரசுத்துறைகள், நிறுவனங்கள், தனியார் அமைப்புகள், கலையுலகினர், வர்த்தக பிரமுகர்கள், பல்வேறு தொழிற்சங்கப் பணியாளர்கள், பொதுமக்கள் அனைவரும் தொடர்ந்து நிவாரண நிதிகளை வழங்கி வருகின்றனர். அவ்வகையில், தமிழக அரசின் பள்ளிக்கல்வித்துறையில் பணியாற்றும் அலுவலர்கள், ஆசிரியர்கள், பணியாளர்கள் அனைவரும் சேர்ந்து தாராளமாக நிதி வழங்கியுள்ளனர்.**

**அதன்படி, பள்ளிக் கல்வித்துறையின் கீழ் செயல்படும், பள்ளிக் கல்வி இயக்ககம் சார்பாக 5 கோடியே 98 இலட்சத்து 87 ஆயிரத்து 410 ரூபாய்; தொடக்கக் கல்வி இயக்ககம் சார்பாக 6 கோடியே 14 இலட்சத்து 29 ஆயிரத்து 746 ரூபாய்; அனைவருக்கும் கல்வித்திட்ட இயக்ககம் சார்பாக 25 இலட்சத்து 96 ஆயிரத்து 432 ரூபாய்; ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம் சார்பாக 20 இலட்சத்து 93 ஆயிரத்து 623 ரூபாய்; மெட்ரிகுலேஷன் பள்ளி இயக்ககம் சார்பாக 36 ஆயிரத்து 628 ரூபாய்; தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் சார்பாக 68 இலட்சத்து 998 ரூபாய்; பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம் சார்பாக 12 ஆயிரம் ரூபாய் ; அரசுத் தேர்வுகள் இயக்ககம் சார்பாக 64 ஆயிரம் ரூபாய் என மொத்தம் 12 கோடியே 61 இலட்சத்து 88 ஆயிரத்து 837 ரூபாய் வழங்கியுள்ளனர். இத்தொகைக்குரிய காசோலைகளை முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு இன்று வழங்கினார்.**

**இத்தொகையுடன் சேர்த்து இதுவரை இலங்கைத் தமிழர் நிவாரண நிதிக்கு சேர்ந்துள்ள மொத்த தொகை 38 கோடியே 34 இலட்சத்து 41 ஆயிரத்து 40 ரூபாய் ஆகும்.**

**பள்ளிக்கல்வித்துறை செயலாளர் திரு. குற்றாலிங்கம், இ.ஆ.ப., பள்ளிக்கல்வி இயக்குநர் முனைவர் பெ.பெருமாள்சாமி, தொடக்கக் கல்வி இயக்குநர் திரு.கு.தேவராஜன், ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர் திருமதி தண்.வசுந்தராதேவி, மெட்ரிக்குலேஷன் பள்ளி இயக்குநர் திரு.பி.மணி, பள்ளிசாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி இயக்குநர் திருமதி எம்.இலட்சுமி ஆகியோரும் கல்வித்துறை அலுவலர்களும் உடனிருந்தனர்.**

* * *

**வெளியீடு**: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை,சென்னை–9.